28 DEC 1995

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க,

# பாவனையாளர் பாதுகாப்பு (திருத்தச்)

# சட்டம்

---

*(1995, செப்ரெம்பர் மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1995 செப்தெம்பர் மாதம் 07 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 30*

தபால் செலவு

# 1995 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம்

[1995, செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஓ. 48/94

**1979 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் 37 ஆம் பிரிவு, "பொருள்" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— *1979 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

'"பொருள்" என்பது —

(அ) ஏதேனும் உணவுப் பொருள் அல்லது பானப்பொருள் என்று ;

(ஆ) ஆணையாளரின் அபிப்பிராயத்தில் சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகவுள்ளதும், கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம் ஆணையாளரினால் அவ்வாறு குறித்துரைக்கப்படுவதுமான வேறேதேனும் வியாபாரப் பொருள் என்று

பொருள்படும்;'.

3. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387' (வெளிநாட்டு) ரூபா 1,840' ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல. 32 திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.